Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

| | |
|---|---|
| Name | :Aravindan |
| Father's Name | :Krishnasamy |
| Village | :Nimmiyampattu |
| Taluk | :Vaniyambadi |
| Caste | :- |
| Calling | :- |
| Religion | :Hindu |
| Age | :40 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.03.2026.

MCOP.No.58/2023 PW1 Name:**அரவிந்தன்**

**முதல் விசாரணை**

நான் மனுதாரர். என் முதல் விசாரணை சாட்சியத்தினை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதனை என் முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். மனுவில் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1 ஆகவும், பதிவு சான்று நகல் ம.சா.ஆ.2 ஆகவும், காப்பீட்டு பாலிசி நகல் ம.சா.ஆ.3 ஆகவும், ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.4 ஆகவும், மருத்துவமனை வெளியேற்றுகை குறிப்பு நகல் ம.சா.ஆ.5 ஆகவும், மருத்துவமனை பில்கள் (5 எண்ணிக்கைகள்) ம.சா.ஆ.6 ஆகவும், ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.7 ஆகவும், வங்கி கணக்கு புத்தக நகல் ம.சா.ஆ.8 ஆகவும், குறியீடு செய்யுமாறு வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

நான் பி.இ எலக்ட்ரிகல் படித்துள்ளேன். இ–சேவை மையம் வைக்க அரசாங்க அனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான். நான் இ–சேவை மையம் வைத்துள்ளேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நிறுவனத்தின் வரவு செலவுகள் வங்கி கணக்கு மூலமாக பராமரிக்கவேண்டும். என்னுடைய வருமானத்தை காட்டகூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. விபத்து நடந்த சமயத்தில் நான் ஓட்டிய இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் நான்தான். விபத்து தொடர்பான புகாரை போலிசார் என்னை விசாரிக்கும்போது கொடுத்தேன். என்மீது மோதிய வாகனத்தை பன்னீர் என்பவர் ஓட்டிக்கொண்டு வந்தார். அந்த வாகனத்தின் பின்னால் வேறு ஒருவர் உட்கார்ந்து இருந்தார். விபத்து குறித்து மேற்படி பன்னீர் தான் ஆலங்காயம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். எனக்கு எதிராக தான் அது கொடுக்கபட்டது. அதன் அடிப்படையில்தான் ம.சா.ஆ.1 பதிவு செய்யபட்டுள்ளது. என்மீது தான் விபத்து வழக்கில் குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்யபட்டுள்ளது. நான் குற்றவழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. குற்றவழக்கில் நான் ரூ.2000/– அபராதம் ஒப்புக்கொண்டு குற்றவியல் நீதிமன்றத்தில் கட்டியுள்ளேன் என்றால் உண்மைதான். கோவிந்தராஜ் வீட்டிற்கு பக்கம் இருந்து வந்துதான் நான் சம்பவ இடத்திற்கு வந்தேன். என்னுடைய அஜாக்கிரதை கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் மிதமான வேகத்தில் வந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் காரணம் என்பதால் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் தவறிழைத்தவர் என்பதால்

இழப்பீடு மனு கேட்டுள்ளது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. என்னுடைய வாகனத்திற்கு காப்பீடு உள்ளது. அந்த காப்பீட்டு நிறுவனத்திடம் தான் நான் இழப்பீடு கேட்கமுடியும் என்றால் சரியல்ல. எதிரில் வந்த வாகனத்தில் இருந்த நபர்களுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் நான் மருத்துவமனையில் இருந்ததால் அதுபற்றி தெரியவில்லை. 4 நாட்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். நானாகதான் மருத்துவமனையிலிருந்து வெளியேறி விட்டேன். தனியார் மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுத்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மருத்துவமனை பில்களுக்கான சிகிச்சை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எந்த அடிப்படையில் மருத்துவமனை பில்கள் வழங்கபட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மருத்துவமனையில் என்ன சிகிச்சை எடுத்தேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மருத்துவ குழுவிற்கு ஆய்வு செய்ய மனு தாக்கல் செய்யவில்லை. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றும் அது முழுமையாக குணமடைந்துவிட்டது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் மனுவில் கேட்டுள்ள இழப்பீட்டு தொகைகளுக்கு உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து நேரத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் காப்பீட்டு பாலிசி விதிமுறை மீறல் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 25/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.25 17:22:39 +0530

சாா்பு நீதிபதி
வாணியம்பாடி.